நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை
தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: II
தொகுதி: 114
திருவள்ளுவர் ஆண்டு 2051

திங்கள் இதழ்
விலை: ரூ.20
நவம்பர் - 2020

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
1867-1911

மன்னர் பாஸ்கர சேதுபதி
1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன்	துணைத் தலைவர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	செயலாளர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	உறுப்பினர்
முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
பேராசிரியர் இரா.சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன்	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
வழக்குரைஞர் ச.தசரதராமன்	உறுப்பினர்
திரு. துரை கருணாநிதி	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் ச.தசரதராமன்	தலைவர்
இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி	செயலாளர்
வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி	உறுப்பினர்
பொறிஞர் க.சி.அகமுடைநம்பி	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. வி.சத்யநாராயணன்	உறுப்பினர்
வழக்குரைஞர் து.மாயராசன்	உறுப்பினர்
வழக்குரைஞர் சு.சிவசாமி	உறுப்பினர்
பொறிஞர் லெ.சிவக்குமார்	உறுப்பினர்
வழக்குரைஞர் ஆர்.பாலாஜி	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம்	உறுப்பினர்
முனைவர். ம.லெல்லிஸ்திவாகர் பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். கி.வேணுகா முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். கோ.சுப்புலெட்சுமி துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1.	**இதழ் மணம்** - பதிப்பாசிரியர்	4
2.	**சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா** - முதுமுனைவர் இரா.இளங்குமரனார்	7
3.	**தொல்காப்பியரும் பரிணாம வளர்ச்சியும்** - பேரா.இரா.சதாசிவனார்	8
4.	**எல்லீசர் போற்றும் தமிழ் யாப்பிலக்கணம்** -பேரா. ப.மருதநாயகம்	14
5.	**சங்கச் செய்திகள்**	41

வலைதளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள் கட்டணம்	ரூ.3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க் கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேரா.இரா.சதாசிவனார், பதிப்பாசிரியர்

'நெடுவெண் நிலவு' என்பது குறிப்புப் பொருள் உணர்த்துவது; தலைவியின் எண்ணம் விரைந்து திருமணம் முடித்து இல்லறம் நடத்த வேண்டும் என்பது; ஆனால் தலைவன் நிலவு காய்கின்ற இரவைப் பயன்படுத்தி களவு ஒழுக்கத்தில் நாட்டம் உடையவனாக இருக்கின்றான்.

அது சிறப்பும் அல்ல. ஊரார் கௌவை நோய் துன்புறுத்த நிலாக்காய்ந்து பலருக்கும் களவைப் பறை சாற்றுகின்றது. அது தலைவிக்கும் நல்லதல்ல; இந்தநிலையில் நிலா தன்னியல்பில் காய்ந்தாலும் தலைவியின் மனத்தில் ஏற்பட்ட ஏக்கமும் காதலும் நிலவு தன்னியல்பு மாறி நீண்டநேரம் காய்வதாக ஏக்கப் பெருமூச்சு விடுகின்றாள்.

அதனால், இரவில் வரும் தலைவனுக்கும் களவு வாழ்க்கை நல்லதல்ல; எனக்கும் மணம் முடித்து இல்லறம் நடத்துவதற்கும் தடையாக நெடிது காய்ந்து துன்புறுத்துகின்றாயே. இத்தனை செய்திகளையும் "நெடுவெண் நிலவே" என்னும் ஒரு தொடரில் அமைத்துப் புலவன் பாட்டை நிறைவு செய்கின்றான். கற்பவர் உள்ளத்தில் அலை அலையான உணர்வுகளைத் தோற்றுவித்து கற்பனை உலகில் வலம் வரச்செய்கின்ற "நெடுவெண் ணிலவே" என்னும் தொடரில் குறிப்புப்பொருள் ஆட்சி செய்வதால் குறுந்தொகையைத் தொகுத்த சான்றோர் பெருமக்கள் பாடல் ஆசிரியரை நெடுவெண் நிலவனார் எனப்போற்றினர். பேராசிரியர்

இளங்குமரனார் கவிதைக்குத் தந்துள்ள விளக்கம் கற்று இன்புறத்தக்கது. இப்பாடல் இயற்கையின் மணம் பரப்புவதை உணர்ந்து இன்புறலாம். கவிஞன், இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையைக் கவிதையாக்கி வாசகர்களை கற்பனை உலகிற்கு அழைத்துச் செல்கின்றான்.

'தொல்காப்பியரும் பரிணாமவளர்ச்சியும்' என்னும் தலைப்பில் இதழ் ஆசிரியர் இரா.சதாசிவனாரின் மொழிபெயர்ப்புக் கட்டுரை இடம் பெறுகிறது. சென்ற நூற்றாண்டில் சென்னை மருத்துவக் கல்லூரி நரம்பியல் துறைப் பேராசிரியராக விளங்கிய பி.இராமமூர்த்தி அவர்கள் 1998ல் இந்து ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியை ஒட்டி கட்டுரை அமைந்துள்ளது. மனித நாகரிகத்தின் தோற்றம் முதல் இன்று வரை மனித இனம் பெற்றுள்ள பரிணாம வளர்ச்சியின் வெளிப்பாடு குறித்த சிந்தனை கட்டுரையில் இடம் பெற்றுள்ளது.

"எல்லீசர் போற்றும் தமிழ் யாப்பிலக்கணம்" என்னும் தலைப்பில் அறிஞர் ப.மருதநாயகம் அவர்கள் எழுதிய அரிய கட்டுரை இவ்விதழில் வெளிவருகிறது. ஆங்கில ஆட்சிக் காலத்தில் இந்திய ஆட்சிப்பணி நிமித்தமாக தமிழகம் வந்த எல்லீசர், தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆழங்கால்பட்டு, தமிழ் இலக்கண இலக்கியங்களின் தனித் தன்மையை உறுதிபட எடுத்துரைப்பதைத் தமிழ் மாணவர்கள் கற்று அறிந்து கொள்ள வேண்டிய இன்றியமையாத தேவை என்றே கருதுகின்றேன். நாற்பத்தோர் அகவையே வாழ்ந்த எல்லீசர் அரிய கற்று ஆசற்ற அறிஞராக விளங்கியுள்ளார்.

தமிழ் யாப்பிலக்கணம் குறித்து எழுதும்போது எதுகையும் மோனையும் தமிழ்க்கவிதையில் வெற்று அலங்காரப் பொருள் அல்ல; இது அழகைக் கூட்டுதற்கோ, இசை இன்பத்தை மிகுவிப்பதற்கோ மட்டுமல்லாமல் பிழையைத் திருத்திக் கொள் வதற்கும் பயன்படுமாறு தமிழ் யாப்பிலக்கண விதிகள் அமைக்கப்பட்டுள்ளன என்னும் கருத்து தமிழ் யாப்பின் இன்றியமையாச் செயற்பாட்டை அறிவுறுத்துகின்றது. மேலும், தமிழ்ப்பாவகைகளைக் கர்நாடக இசையின் இராகங்களோடு

பொருத்திக் காட்டுவது எல்லீசரின் இசையறிவையும் யாப்பு அறிவையும் இசை உலகமும் தமிழ் உலகமும் நுண்ணிதின் உணர்ந்து போற்றுதற்குரியதாகும். வெண்பா – சங்கராபரணம்; அகவல்-தோடி; எனப் பாவகைகள் அனைத்தையும் குறிப்பிட்டு அதற்குரிய கர்நாடக இராகங்களைப் பொருத்திக் காட்டும் எல்லீசரின் புலமை வியத்தற்குரியதாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சிவவாக்கியர் என்னும் மெய்யுணர்வாளரின் கவிதை குறித்து எல்லீசர் தரும் விளக்கம் "இறைவனைப் பற்றிய ஒரு சொல்லாடல்" என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. சமுதாயச் சீரழிவிற்குக் காரணமான முடிவில்லாத சடங்குகள், சாதுர்யமான தத்துவம், அலங்கரிக்கும் தொன்மம் ஆகியவற்றை சிவவாக்கியர் சாடுவதோடு புரோகிதர் இனம் உயர்ந்த புனிதத்தன்மைக்கு உறவு கொண்டாடுவதைச் சுட்டிக்காட்டி, இறைவன் தன்னுடைய படைப்பில் பிறவியிலேயே ஏற்றத்தாழ்வை உண்டாக்கி இருக்கிறான் என்னும் நால்வர்ணக் கோட்பாட்டை எள்ளி நகையாடுகிறார்.

சில சொற்களைத் திரும்பத்திரும்பச் சொல்வதன் மூலமாகவோ அற்பமான, பொருளற்ற சடங்குகள் மூலமாகவோ புண்ணியம் அடையலாம் என்பது வீணான நம்பிக்கை என்னும் சிவவாக்கியரின் கூற்றை வழிமொழிந்து எல்லீசர் இறைவனைப் பற்றிய மெய்யுணர்வுக் கருத்துக்களையும் கற்பவர் மனத்தில் ஆழப்பதியச் செய்கின்றார்.

எல்லிசர் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் வழங்கிய அறிவார்ந்த செய்தி மீண்டும் மீண்டும் அறிய வேண்டிய ஒன்றாகையால் போராசிரியர் ப. மருதநாயகம் அரிதின் முயன்று கட்டுரை வடித்துத் தந்துள்ளார். அரிய செய்தி ஆழமான கருத்துக்கள் இவற்றை உள்ளடக்கிய இக்கட்டுரை பலமுறை படித்து உள் வாங்கிக் கொள்ள வேண்டியது; நுனிப்புல் மேய்கின்றவர்களுக்கு இக்கட்டுரை கடினமாகத் தோன்றினும் தமிழ் மாணவர்களும் ஆசிரியர்களும் கற்க வேண்டிய செய்திகள் பல உள்ளன.

****

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

முதுமுனைவர் இரா.இளங்குமரனார்

18. நெடுவெண் நிலவனார்

செறிவான காடு, கரிய நிறக்கற்கள் அங்கும் இங்கும் கிடக்கின்றன. அருகில் வேங்கை மரம். அதன் வெண்ணிறப்பூ. கல்லின் மீது வரிவரியாகக் கிடக்கின்றன. நல்ல நிலவுப்பொழுது. அப்பொழுதில் அக்கல்லின் தோற்றம் வேங்கைப் புலிக்குட்டி படுத்திருப்பதாகத் தோற்றம் தருகிறது. தலைவியை இரவுப் போதில் வந்து வந்து சந்திக்க விரும்புகிறான் தலைவன். அவன் எண்ணத்தை மாற்றி மணம் கொள்ள வைக்க எண்ணுகிறாள் தோழி. அதனால் நிலவை நோக்கிய அவள்,

கருங்கால் வேங்கை வியுகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை அல்லை நெடுவெண் ணிலவே (குறுந். 47)

என்கிறாள்.

தலைவன் இரவு வந்து ஒழுகும்காலை முன்னிலைப் புறமொழியாக நிலாவிற்கு உரைப்பாளாகத் தோழி உரைத்தது என்பது கூற்று விளக்கம். முன்னே நிற்பவர் கேட்க, அவரை நோக்கிக் கூறாமல், வேறொன்றை நோக்கிக் கூறுவது முன்னிலைப் புறமொழியாம். நிலவு இயற்கை இயக்கம்: தன்னியலில் இயங்கும். அது நெடிது பொழுது விளங்குவதாகக் கூறுவதால் இதனைப் பாடியவர் பெயரை 'நெடுவெண் நிலவனார்' என்று பெயர் கொண்டனராம்.

அரும்பொருள்: கால் – அடி, வீ – பூ, துறுகல் – உருண்டைக்கல்; குருளை – குட்டி; எல்லி – இரவு, நல்லை அல்லை – நல்லது செய்வதாய் அல்லாய்.

பயன்: இரவு வாராது, மணந்து கொள்க என்பதாம்.

தொல்காப்பியரும் பரிணாம வளர்ச்சியும்

பேரா.இரா.சதாசிவனார்

பரிணாம வளர்ச்சியில் உயிரினங்கள் ஐந்து அறிவு பெற்று அதன் பின்பு மூளை, மனம் என்னும் ஒன்றிணைந்த இயக்கம் பெற்று ஆறு அறிவு உயிர்களாக மாற்றம் பெறுகின்றன. உயிர்களின் ஐந்து அறிவு நிலை ஆறு அறிவு நிலை என இரண்டு கூறுகளும் ஆய்வுக்குரியன.

உயிரினங்களின் வளர்ச்சியில் மூளை முக்கிய பங்கு வகிக்கிறது. மூளையின் முதன்முதல் தோன்றிய பகுதி ஐப்போதாளமசு என்னும் பகுதியாகும். இதன் பணி உணவு செரிமானம், மூச்சு இயக்கம், இதயத் துடிப்பு, இச்சையைத் தூண்டும் பாலுணர்ச்சி, இனப்பெருக்கம், வெறிஉணர்வு, செயலூக்கம் பெருகின்ற இச்சை, அவா, வெகுளி முதலான விலங்குணர்வுகளின் மையமாக இருந்து மூளையின் முன்தோன்றிய ஐப்போதாளமசு செயல்படுவதால் பெரும்பகுதியாக மக்கள் மாக்களாக, விலங்குகள் போல செயல்படுவது பெரும்பாலான மக்களால் தவிர்க்க முடியாததாகிறது.

ஐப்போதாளமசின் ஆதிக்கம் தவிர்க்கமுடியாததற்கு மூளையின் கட்டமைப்பில் அதன் வீறு பின்தோன்றிய பெருமூளையின் அறிவு சார்ந்த செயற்பாடுகளைப் புறக்கணிப்பதாலாகும். பெருமூளைக்கும் ஐப்போதாமசுக்கும் இடையே மாறுபாடு, செயற்பாடுகளில் உள்ள வேற்றுமையே காரணம். பெருமூளை அறிவை நோக்கியது; ஐப்போதாளமசு உணர்ச்சி சார்ந்த கூறுபாடுகளிலேயே செயலூக்கம் பெறுகிறது. எனவே இரண்டும் மூளையில் இருவேறுபட்ட செயற்பாடுகளைத் தூண்டுகின்றன. இதனைத் திருக்குறள்,

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர்

என்கிறது.

"இருவேறு உலகத்து இயற்கை" எனவும் திருக்குறளில் குறிப்புள்ளது உணரற்பாலது.

தொல்காப்பியர் மிகத்தெளிவாக,

மாவும் மாக்களும் ஐஅறிவினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

என்றும்

மக்கள் தாமே ஆறு அறிவு உயிரே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

என்றும்

ஒருசார் விலங்கும் உள என மொழிப

என்றும் மரபியல் நூற்பாக்களில் எடுத்துரைப்பது தொல்காப்பி யரின் அறிவியல் பார்வையை நமக்கு எடுத்துரைப்பதாகும்.

"ஒருசார் விலங்கும் உள என மொழிப" என பிற அறிவியல் நூலாசிரியர் கூற்றாக "மொழிப" என்ற ஆசிரியர் தொல்காப்பியர் கூற்று பிற அறிஞரும் இவ்வாறு சிந்தித்திருப்பதை எடுத்துரைப்ப தாகும்.

உடல் உறுப்புக்கள் அனைத்தும் சேர்ந்து உடம்பு முழுவடிவம் பெறுகிறது. அதற்குமேல் மனம் என்னும் ஒன்று செயல்படுவது உடம்பை இணைக்க இன்றியமையாது தேவைப்படுகிறது. மனம் என்பது மூளையின் செயல்பாடுகளில் மிகமுக்கியமானது. ஆகவே மூளையும் அதன் தொடர்பான நரம்பு மண்டலமும் உடல்முழுவதும் ஊடுருவிப்பரவியுள்ளது. நரம்பு உடலின் இழைஅணுக்கள் வழியியங்கித்தூண்டி மூளைக்கும் மனத்திற்கும் அனுப்புகிறது. அதனால் உடம்பின் ஒவ்வொரு பகுதியின் செயல்பாடும் மூளைவழி

மனத்தைத் தாக்குகிறது. மனத்தின் செயல்பாடு உடம்போடு பொறிகளைச் செயல்படத்தூண்டுகிறது. மூளை உடம்பின் ஒவ்வொரு உணர்வுகளையும் பாதுகாப்பு ஆற்றலையும் உருவாக்குகிறது. நம்பிக்கை மிகமுக்கியம். எதையும் எதிர் கொள்ளும் பக்குவம் மூளை பெற்று மிகப்பெரிய சிந்தனை வளர்ச்சியையும் பெறுகிறது. மூளை அல்லது மனம் குழப்பம் அற்ற ஒழுங்கியல் நிலையில் செயல்படும்போது உடம்பின் எதிர்ப்பு ஆற்றல் மிக்கோங்குகிறது. இத்தகைய மனத்தின் நம்பிக்கையை உளவியல் நரம்பியல் எதிர்ப்பு ஆற்றல் மிக்கநிலை என அறிவியல் தெரிவிக்கிறது. உள்ளத்தின் நம்பிக்கையை இயக்கிச் சிறந்த பயன்பெறுகிறது.

மனமும் மூளையும் ஒருங்கிணைந்தநிலை ஒன்று உண்டு; மனம் தூண்டும்போது மூளைத்திறன் தன்னம்பிக்கை பெறுகிறது. பழைய நாட்களில் மந்திரமும் தந்திரமும் மருந்தும் எனக்கூறினர். மந்திரம் உளப்பயிற்சி; தந்திரம் தன்னம்பிக்கை உந்துதல்; மருந்து நோய் எதிர்ப்பு ஆற்றல் பெற எடுத்துக்கொள்ளும் மருந்து. இம்மூன்றும் ஒன்றுக்கு ஒன்று தொடர்புகொண்டு செயல்படுகிறது. "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய்தீர்த் தருளவல்லான்" என்று பெரியவர்கள் போற்றினர். மனஅழுத்தம் போன்ற நோய்க்கு மனஅமைதி அல்லது மன ஒழுங்கு நோயைச் சரிசெய்யும் ஆற்றல் மனஉறுதி என்னும் நம்பிக்கைக்குண்டு. நோயின் அழுத்தம் நோயாளியின் நிலைக்கு ஏற்ப சில நேரங்களில் மருந்தும் தேவைப்படும். மனம் நோய்எதிர்ப்பு சக்தியையும் உடல்நலத்தையும் தீர்மானிக்கிறது. மூளை தன்னம்பிக்கை - அலைவழியாக இதயத்

ஆற்றல் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தி
தன்னைச் சூழ்ந்துள்ள எதிர்
அலைகளிலிருந்து மீண்டு எழுந்து வெற்றி
பெற்று மனம் மூளையை இயக்கும் ஆற்றல்
வலிமையை உண்டாக்குகிறது...

துடிப்பையும் சரிசெய்யும் ஆற்றல் பெறுகிறது. நுரையீரலின் காற்றியக்கத்தையும் கண்ணின் பார்வையாற்றலையும் கூட இயங்குவிசையில் இயக்கும் ஆற்றல் பெறுகிறது. மூளையை இயக்குகின்ற உயிர்க்காற்று, மூளையைச் சார்ந்த இயக்க ஆற்றல் கொண்ட எரியம் போன்றவை மூளையை உயிர்ப்புடையதாகச் செய்கிறது. ஒருவன் பேசும் போதும் சிந்திக்கும் போதும் அவை சார்ந்த மூளைப் பகுதி செயல்படுகிறது. அப்போது உயிர் ஊன்மசிதைவு மாற்றம் பெற்று மூளையின் அப்பகுதி வேலை செய்கிறது. மிச்சப்பகுதி செயலற்று இருக்கிறது.

மூளை ஓய்வு எடுக்கும் நிலை தியானநிலை எனப்படும். அப்போது மூளையில் மாற்றம் நிகழ்கிறது. உடம்புமுழுவதும் அம்மாற்றம் செயலாக்கம் பெறுகிறது. உடம்பின் வெப்பம் தணிகிறது. உயிர் அணுச்சிதைவு மாற்றம் குறைகிறது. இதயத்துடிப்புத் தன் வேகத்தை குறைத்துக் கொள்கிறது. மூச்சின் இயக்கமும் சிறு மாற்றம் அடைகிறது. ஆனால் மூளை செயல்ஊக்கம் பெறுகிறது. அந்தநிலையில் ஒருவன் தூங்குவதில்லை; அவன் விழித்துக் கொண்டிருக்கிறான். அப்போது உடம்பின் உயிர் ஆற்றல் மேலோங்குகிறது. எதிர்ப்பாற்றல் நம்பிக்கையில் உண்டாகிறது. நோய் எதிர்ப்பு சக்தி, உடல்வலிமை என மனம் உறுதியாக நம்பிச் செயல்படும் ஆற்றல் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தி தன்னைச் சூழ்ந்துள்ள எதிர் அலைகளிலிருந்து மீண்டு எழுந்து வெற்றி பெற்று மனம் மூளையை இயக்கும் ஆற்றல் வலிமையை உண்டாக்குகிறது. மனமும் மூளையும் உடல்முழுவதும் உள்ள நரம்பு மண்டலத்தை இயக்கி தன்னையும் தன்னைச் சூழ்ந்துள்ள நோய்த் தாக்கத்தையும் எதிர் கொள்ளும் வலிமை பெறுகிறது. உளவியல் ஆற்றலை மிகுவிக்கும் பேராற்றல் இத்தகைய மனப்பயிற்சிக்கு உண்டாகிறது.

மூளையும் அதன்தோற்றமும் செயல்பாடுகளும் :

உடல் அமைப்பைப் பொறுத்தவரையில் மனித உடல் மற்ற உயிரினங்களின் தன்மையிலிருந்து வேறுபடுகிறது. மானிட இனத்தின் மண்டை அதனுள்ள மூளையும் மற்ற

உயிரினங்களிலிருந்து வேறுபட்டு வளர்ந்து பெரிதாக உள்ளது. மூளையிலிருந்து நரம்புமண்டலம் விரிவடைந்து உடம்பு முழுவதும் பரவியுள்ளது. மூளையின் பலபாகம் பலகூறுகளாக பலவேலைப் பணிகளைக் கவனிக்கிறது. ஐப்போதாளமசு என்னும் மூளைப்பகுதி வளர்ச்சியில் முதன்முதலாகத் தோன்றிய பகுதி. அதன் தோற்றம் பலகோடி ஆண்டுகள்; மூளையின் முன்தோன்றிய பகுதியாகிய ஐப்போதாளம் உடம்பின் உணவு செரிமானம், மூச்சியக்கம், இதயத்துடிப்பு, பாலுணர்வு, இனப்பெருக்கம், உணர்வு சார்ந்த இச்சை, அவா, வெகுளி முதலான விலங்குணர்ச்சிகளைத் தூண்டிச் செயல்படும் பணி இதனுடையதாகும்.

பலகோடியாண்டுகள் பழமையானதால் இவற்றின் தாக்கம் மேலாதிக்கம் பெற்று அதன்பின் தோன்றிய அறிவு சார்ந்த செயல்பாடுகளைச் செயல்படாமல் தடைசெய்யும் மூப்பு ஐப்போதாளமசுக்கு உண்டு. அதனால் மனிதனின் செயல்கள் பெரும்பகுதி விலங்கு உணர்ச்சியாகவும் சிறுபகுதி அறிவு, ஒழுக்கம், கல்வி, அறம் சார்ந்ததாகவும் அமைகிறது. பின்பு வளர்ந்த பெருமூளைப்பகுதியின் ஆளுமை ஐப்போதாளமசின் செயற்பாடுகளை அடக்க முடியாது மானிடம் தவிக்கிறது. கல்வி அறிவு, மெய்யுணர்வு, பகுத்தறிவு உயர்நிலை பெறுவது பெருமூளையின் செயல்திறன் சார்ந்தது. பெரும்பான்மையான மக்கள் ஒழுங்கின்மைக்குக் காரணம் அவர்தம் விலங்குணர்ச்சி மூளைப்பகுதி செயலாதிக்கம் பெற்று தன்னிச்சையாகச் செயல்படுவதாலாகும். அவை ஐந்து அறிவு பெற்ற விலங்குகளைப் போலச் செயல்படுவதாலாகும்.

மனிதன் பலகோடி ஆண்டுகளாகப் பரிணாம வளர்ச்சி பெற்று

"மூளையின் பெருமூளைப் பகுதியானது, பன்னெடுங்கோடியாண்டுகள் மிருகவெறி கொண்டு உணர்ச்சிக்கு அடிபணிகின்ற மூளையின் அடிப்பகுதி ஐப்போதாளமசு என்னும் பகுதியை அடக்கமுடியாமல்..."

விலங்கியல்பிலிருந்து கல்வி, கலை, பண்பாடு, நாகரிகம், அறிவியல் என மானுட வாழ்வை அணிசெய்தது மூளையின் பிற்காலத்தே தோன்றி வளர்ச்சி பெற்ற பெருமூளைப் பகுதியின் செயல்பாடு; தன் சிந்தனைத்திறனை வளர்த்து மேம்படுத்தி ஒருபக்கம் நாகரிக உலகை உருவாக்கி வருகின்றான். மற்றொரு பக்கம் பலகோடி ஆண்டுகளாகத் தம் இயற்கையில் இயற்கையோடும் விலங்கோடும் நடத்திய போராட்டத்தின் விளைவாக அதன் ஒருபகுதியாக விலங்கியல் கோட்பாடுகளை அரசியலாக்கி, ஓருலகை பல நாடுகளாகப் பிரித்து அதன் விளைவான போர், ஆயுதக்குவிப்பு, மதம் அதன் விளைவான சமயப்பிரிவினை, சாதிப்பிரிவினை என உயிர்களைத் துன்புறுத்தும் வன்முறைச் செயல்கள் அடங்காவெறி கொண்டு உலகை அழித்து வருவதைப் பார்க்கிறோம். வளர்ந்து பண்பட்ட மூளையின் பெருமூளைப் பகுதியானது, பன்னெடுங்கோடியாண்டுகள் மிருகவெறி கொண்டு உணர்ச்சிக்கு அடிபணிகின்ற மூளையின் அடிப்பகுதி ஐப்போதாளமசு என்னும் பகுதியை அடக்கமுடியாமல் திசைதவறிச் சென்று திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறது.

திருவள்ளுவர் 'விலங்கொடு மக்கள் அனையர்' என்பது ஐப்போதாளமசின் ஆட்சிக்குட்டப்பட்ட 'மாவும் மக்களும்' என்பதும், மூளையின் பின் தோன்றிய (Frontal Lab) மூளைப்பகுதி இலங்கு நூலாகிய அறிவு நூல்களைக் கற்று உயர்நிலைபெற்ற அறிவு உலகத்தையும் கருத்தில் கொண்டு எழுதியதாகும். தொல்காப்பியரும் மாவும் மாக்களும் அறிவு உலகத்திற்குத் தொடர்பு இல்லாதவர்கள் என்பதால் 'மாவும் மாக்களும் ஐயறிவினவே' என்றும் பகுத்தறிவு என்னும் உண்மை அறிவு உடையவர் 'மக்கள்தாமே ஆறுஅறிவு உயிரே' என்றும் மக்கள் இனத்தின் பரிணாம வளர்ச்சியை உள்ளத்தில் கொண்டு எழுதிய நூற்பாக்கள் என்பது தெளிவாகிறது. திருவள்ளு வரும் தொல்காப்பியரும் ஒத்த சிந்தனையாளர்களாக மனிதனின் பரிணாம மாற்றத்தை ஏற்று நூல் செய்திருப்பது சிந்தித்தற்குரியதாகும்.

இக்கட்டுரை நரம்பியல் மருத்துவர் பி.இராமமூர்த்தி 18 அக்டோபர் 1998ம் ஆண்டு இந்து நாளிதழுக்கு அளித்த பேட்டியைத் தழுவி எழுதப்படுகிறது.

****

எல்லீசர் போற்றும் தமிழ் யாப்பிலக்கணம்

பேரா.ப.மருதநாயகம்,
ஆய்வறிஞர் (ஓய்வு),
நடுவண் அரசு செவ்வியல் தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை 600 113
அலைபேசி : 94427 87727

எல்லிஸ் விட்டுச் சென்றுள்ள தமிழ் யாப்பிலக்கணம் பற்றிய ஆங்கிலக் கையெழுத்துப்பிரதி, அவரது திருக்குறள் விளக்கம் (Tirukkural: Ellis' Commentary) எனும் 1955இல் வெளிவந்த நூலை ஒத்த சிறப்புடையதே.

தமிழ்மொழியை ஆழ்ந்து கற்றதோடு அவர் காலத்துக்கிடைத்த எல்லாப் பழந்தமிழ் இலக்கியங்களையும் ஓலைச்சுவடிகளிலேயே படித்தறிந்திருந்தார் என்பதற்கு இவ்விரண்டு நூல்களும் அரிய சான்றுகளாகின்றன. தமது பதினெட்டாம் அகவையில் 1796ஆம் ஆண்டில் இளம் அதிகாரியாக இந்தியாவிற்கு வந்த எல்லிஸ் 1819இல் நாற்பது வயதானபோதே இறந்தாரெனினும் அரசியல், சமுதாயம், வரலாறு, மொழி, இலக்கியம் ஆகிய துறைகளில் பெரும்பணியைச் செய்து முடித்தார்.

அச்சாதனைக்கு அவர் ஓயாது உழைத்திருக்க வேண்டும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு தென்னிந்திய மொழிகளும் அவற்றோடு நெருங்கிய உறவுடைய ஏனைய சில மொழிகளும் ஆரியக் குடும்பத்தினின்றும் வேறுபட்டவை யென்பதையும் வடமொழியின் துணையின்றியே இயங்கவல்லவை யென்பதையும் கால்டுவெல்லிற்கு ஐம்பது

ஆண்டுகளுக்கு முன்னமேயே கண்டறிந்த எல்லிஸ் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் இனம், தமிழ்ப்பண்பாடு ஆகியவற்றின்பால் தனித்த ஈடுபாடு கொண்டு அவற்றின் சிறப்பை உலகறிய வேண்டுமென்று தம்மாலான பங்களிப்பைச் செய்தார்.

ராமநாதபுரத்தில் எல்லிசின் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் உள்ள கல்லறைக் குறிப்பு அவரது அறிவாற்றல் அவர் காலத்திலேயே உணரப்பட்டிருந்ததென்பதற்கு அழியாச் சான்றாகும்.

Sacred to the memory of Francis Whyte Ellis Esq. of the Madras Civil Service whose valuable life was suddenly terminated by a fatal accident at this place on the 9th March 1819 in the 41st year of his age, Uniting activity of mind with versatility of genius he displayed the same ardour and happy sufficiency on whatever his varied talents were employed. Conversant with the Hindoo Languages and Literature of the Peninsula, he was loved and esteemed by the Natives of India with whom he associated intimately, and his kind and playful disposition endeared him to his countrymen among whom he was distinguished no less by his capacity as a public servant than by a mind fraught with intelligence and alive to every object of interest or utility. The College of Fort St. George which owes its existence to him is a lasting memorial of his reputation as an Oriental Scholar, and this stone has been erected as a tribute of the affectionate regard of his European and Native friends.

நாற்பத்தோராம் வயதில் 9 மார்ச் 1819இல் இங்கு நடந்த எதிர்பாராத விபத்தால் முடிவுக்கு வந்த அரிய வாழ்விற்கு உரியவரான சென்னை அரசுப் பணி ஆற்றிய பிரான்சிஸ் வொய்ட் எல்லிஸ் அவர்களுடைய நினைவின் புனிதச் சின்னமாக இது எழுப்பப்படுகிறது. அவருடைய பல்வகை ஆற்றல்களைக் காட்டக்கூடிய எப்பணியில் ஈடுபட்டாலும் குன்றாத ஆர்வமும் மகிழ்ச்சி பூத்த உள்ள நிறைவும் கொண்டு அறிவின் செயற்பாடும் பல்துறை மேதைமையும் இணைந்தியங்கச் செயல்பட்டவர் அவர். தென்னிந்தியத் தீபகற்பத்தில் இந்துக்கள் பேசிய மொழிகளையும் அவற்றிலிருந்த இலக்கியங்களையும் நன்கு கற்றறிந்த அவரை

அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த இந்தியர்கள் யாவரும் விரும்பி மதித்தனர். அவரது நாட்டைச் சேர்ந்தவர்களும் அவரது அன்புள்ளத்தால் ஈர்க்கப்பட்டனர். பொதுநல ஊழியன் என்ற முறையில் அவர் பெற்றிருந்த ஆற்றலும், ஒவ்வொரு பொருளிடத்தும் அவர்காட்டிய ஆர்வமும், அவரது பேரறிவும், அவரது நாட்டிலிருந்து வந்த ஏனைய அதிகாரிகளிடமிருந்து அவரைப் பிரித்துக் காட்டின. கீழ்த்திசைக் கல்வியில் வல்லுநர் என்ற அளவில் அவர் பெற்றிருந்த புகழுக்கு அவரால் வாழ்வு பெற்ற ஃபோர்ட் செயிண்ட் ஜார்ஜ் கல்லூரி அழியாத நினைவுச் சின்னமாகும். அவருடைய ஐரோப்பிய, இந்திய நண்பர்கள் அவர்பால் கொண்டிருந்த அன்பையும் மரியாதையையும் பாராட்டுமுகத்தான் இக்கல் எழுப்பப்பட்டிருக்கிறது.

ஏ.சி. பர்னல் எனும் மொழியியல் வல்லுநர், "எல்லிஸ் உண்மையிலேயே ஒரு பெருங்கல்வியாளர்" ("A truly great scholar") என்று அவரைப் பாராட்டுவார். மொழிகளை ஒப்பாய்வு செய்வதில் அவர் ஒரு முன்னோடி என்றும் ஆரிய மொழிகளின் ஒப்பாய்வுக்கு, பாப் (Bopp) அடித்தளமிட்டதுபோல் திராவிட மொழிக்குடும்பத்தின் ஒப்பாய்வுக்கு அடித்தளமிட்டவர் எல்லிஸ் என்றும் பர்னெல் தெளிவுபடுத்துவார்.

தமது தென்னிந்தியத் தொல்லெழுத்து ஆய்வுக்கலை (South Indian Palaeography) பற்றிய நூலில் பர்னல் எல்லிசை அத்துறையில் விற்பன்னரென்று அடிக்கடி குறிப்பிடுவதோடு, தென்னிந்தியக் கல்வெட்டுகளை முதல்முதல் சேகரிக்கத் தொடங்கியவர் அவரேயென்றும் எடுத்துரைப்பார். போப் அடிகளாரும் (Rev. G.U. Pope) எல்லிசை 'வியத்தகு திறன் பெற்ற கீழ்த்திசைப் புலமையாளர்' (An Oriental scholar of extraordinary ability) என்று புகழ்வதைக் காணலாம். எல்லிசின் குறள் மொழிபெயர்ப்பைப் போப் அடிகளாரின் மொழி பெயர்ப்போடு ஒப்பிட்டுக்காட்டும் ஆர்.ஈ.ஆஷர் (R.E. Asher), எல்லிஸ் சில தவறுகள் செய்கின்றார் என்றாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது எல்லிசின் ஆங்கிலமொழிபெயர்ப்பே சிறப்புடையதாகத் தெரிகின்றதென்றும் அவர் திருக்குறள்

முழுவதையும் மொழிபெயர்த்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே யென்று குறளைப் படிப்பார் விரும்புவாரென்றும் கூறுவார்.

More careful revision might have improved some of Ellis' translations, but on the whole they read better than Pope's... Because Ellis did not live either to complete or to put a final polish to his Commentary, the translations it contains may sometimes, as Pope said, fall short of perfection. But students of the Kural may well wish that something of the same kind was available for the whole work.

இத்தகைய பாராட்டுகளெல்லாம் உயர்வுநவிற்சி அன்றென்பதை எல்லிசின் தமிழ் யாப்பிலக்கணம் பற்றிய நீண்ட கட்டுரையை ஒருமுறை படிப்பாரும் அறியலாம். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவற்றின் இலக்கணங்கள், பாவகைகளின் பட்டியல்கள், அவற்றின் வரையறைகள், அவற்றிற்கான சான்றுப்பாடல்கள், சான்றுப்பாடல்களின் ஆங்கில மொழி பெயர்ப்புகள், அப்பாடல்களிலிருந்து கிடைக்கும் பண்பாட்டுக் குறிப்புகள் ஆகியவற்றையெல்லாம் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. இலக்கணங்களுக்குத் தொன்னூல் விளக்கம், யாப்பருங்கலக் காரிகை போன்றவற்றிலிருந்து நூற்பாக்களை யெடுத்துக் கொள்ளும் எல்லிஸ் சான்றுப்பாடல்களுக்கென்று ஓலைச்சுவடிகளிலிருந்த இலக்கியங்களைக் கொண்டு ஒரு பெரிய கருவூலத்தையே உருவாக்கிக் கொள்கிறார்.

திருக்குறள் விளக்க நூலிலும் தமிழ் யாப்பிலக்கணப் பிரதியிலும் மேற்கோள் பாடல்களாக வருபவை பின்வரும் இலக்கியங்களிலிருந்து பெறப்பட்டவை: தொல்காப்பியம், புறநானூறு, திருக்குறள், வளையாபதி, நாலடியார், பழமொழி நானூறு, ஏலாதி, ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திருமந்திரம், திருவாசகம், திருவாய்மொழி, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், ஏரெழுபது, தேம்பாவணி, நீதிநெறிவிளக்கம், அறநெறிச்சாரம், நைடதம், திருக்காவலூர்க்கலம்பகம், தொன்னூல் விளக்கம், மூதுரை, நல்வழி, நீதிநெறி, நீதிவெண்பா, நன்னெறி, ஞானாதிக்கராயர் காப்பியம், அருங்கலச் செப்பு, சூளாமணி,

இரங்கேச வெண்பா, நல்லாப்பிள்ளை பாரதம், பெருந்தேவனார் பாரதம், கூர்மபுராணம், காசிக்கண்டம், பிரமோத்தர காண்டம், ஒழிவில்ஒடுக்கம், திருமுருகாற்றுப்படை, பிரபுலிங்கலீலை, கோவிந்தசதகம், சிவசிவ வெண்பா, திருவருட்பயன், தண்டலையார் சதகம். அவரது ஆழ்ந்தகன்ற தமிழ் இலக்கியப் புலமையை அறிய இப்பட்டியலே போதும்.

எழுத்து அசை சீர் தளை அடி தொடை ஆறும் வழுத்திய

செய்யுள் மருவுஉ றுப்பெனவே

எனும் தொன்னூல் நூற்பாவை மொழிபெயர்க்கும்போது எல்லிஸ் கீழ்க்கண்ட குறிப்பைச் சேர்ப்பார்

'எழுத்து' என்பது 'letter' எனும் ஆங்கிலச் சொல்லின் பொருளைத் தருவதாயினும் அதனை ஆங்கிலத்தில் 'syllable'என்று மொழிபெயர்ப்பதே முறையாகும். ஒவ்வொரு தமிழ் எழுத்தும் உண்மையிலேயே ஒரு syllable (சொல்லின் பகுதியாகிய அசை) ஆகும். தமிழில் உள்ள எல்லாவுயிர் எழுத்துகளும் இயல்பாகவே syllables என்று சொல்லப்பெற வேண்டியவை. தமிழ் மெய்யெழுத்து ஒவ்வொன்றும் ஏதேனும் ஓர் உயிரெழுத்தோடு இணைந்திருக்கும்.

நான் எழுத்தை syllable என்று மொழிபெயர்க்காததற்குக் காரணம் அவ்வாறு மொழிபெயர்த்தால் 'அசை' என்ற சொல்லிற்குத் தக்க வேறொரு ஆங்கிலச் சொல்லை நான் தேடவேண்டியிருக்கும். 'அசை'யை 'feet' என்று மொழிபெயர்க்கலாம். ஆனால் அவ்வாறு மொழிபெயர்த்துக் கொண்டால் 'சீர்' என்ற சொல்லிற்கு வேறு ஆங்கிலச் சொல்லைக் காணவேண்டிய இடர்ப்பாட்டை நாம் எதிர்கொள்ள வேண்டிவரும்.

தமிழில் உள்ள எல்லாப் பாவகைகளையும் சான்றுகளோடு எல்லிஸ் நிரல்படுத்துவார்.

செய்யுள் பத்திகள் (stanzas) இரண்டு வகைப்படும். பா அல்லது பாடல் என்பது பலவகைத் தளைகளைக் கலந்த அடிகளைக் கொண்டது. அவ்வடிகள் யாவும் ஒரே அளவினதாக இருக்க வேண்டியதில்லை. விருத்தம் என்பது நான்கு அடிகளைக் கொண்ட

செய்யுள் பத்திகளாலானது. அதன் தளையமைப்பு குறிப்பிட்ட ஒரு தன்மையதாக இருக்க வேண்டும்.

பாக்கள் ஐவகைப்படும். அவற்றுள் பலவற்றிற்கு உட்பிரிவுகள் உண்டு.

அவையாவன: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா. குறள்வெண்பா, சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, சவலை வெண்பா, பஃறொடை வெண்பா, வெண்கூ வெண்பா, கலிவெண்பா என்பவையே எட்டுவகை வெண்பாக்களாகும்.

ஆசிரியப்பா நேரிசையாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டிலவாசிரியப்பா, அடிமறிமண்டிலவாசிரியப்பா என நான்கு வகைப்படும்.

கலிப்பா பல வகைகளை உள்ளடக்கியது.

வஞ்சிப்பாவின் செய்யுள் பத்தி வெவ்வேறு வடிவம் கொள்ளலாமாயினும் அது ஒரு வகைத்தானது என்றே கருதப்படுகிறது.

மருட்பா வென்பது வெண்பாவும் அகவலும் கலந்தது. அதன்வகை ஒன்றே.

கலிப்பா ஒத்தாழிசைக் கலிப்பா, கொச்சகக் கலிப்பா, வெண்கலிப்பா என மூன்று வகைப்படும்.

கலிப்பாவின் ஒவ்வொரு செய்யுள் பத்தியும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படும்: முதலுறுப்பு, துணையுறுப்பு.

முதலுறுப்பை principal member என்றும் துணையுறுப்பை adjunct member என்றும் எல்லிஸ் குறிப்பிடுவார்.

முதலுறுப்புகள் என்று தரவு, தாழிசை ஆகிய இரண்டையும், துணையுறுப்புகள் என்று தனிச்சொல், சுரிதகம், வண்ணகம், அம்போதரங்கம் ஆகியவற்றையும் அவற்றின் வரையறைகளோடு அறிமுகப்படுத்துவார்.

தரவு செய்யுள் பத்தியைத் தொடங்குகிறது. நான்கு அளவடிகளைக் கொண்டது; கலி, வெண் தளைகளால் ஆக்கப்படுவது; இரண்டடி எதுகைகள் பெறுவது.

இவ்வமைப்புக் கொண்ட தரவு ஒன்றாகவும் இருக்கலாம்; இரண்டாகவும் இருக்கலாம்.

தரவை அடுத்து வருவது தாழிசை. அது மூன்று பத்திகளைக் கொண்டது; ஒவ்வொரு பத்தியும் இரண்டு அல்லது நான்கு அடிகளால் ஆனது. தரவு இரட்டிக்குமானால் தாழிசையும் இரட்டிக்க வேண்டும். தரவு நான்கு அல்லது எட்டு அடிகள் கொண்டிருப்பின் தாழிசை ஆறு அல்லது பன்னிரண்டு அடிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

தாழிசையையடுத்துத் தனிச்சொல்லுக்கு முன்னால் வருவது வண்ணகம். நான்கு இயற்சீர் (கருவிளம்)களாலான கவிதைகளை வண்ணகம் கொண்டிருக்கவேண்டும். இவ்வகை அடிமட்டுமே பயின்றுவரல் வேண்டும். நான்கிற்குக் குறைவாகவோ, எட்டிற்கு மேற்பட்டோ கவிதை இருக்கக் கூடாது.

நான்காவது துணையுறுப்பாகிய அம்போதரங்கம் நான்கு பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதியும் மற்றவற்றோடு ஒப்பிடும்போது குறைந்துகொண்டே போகவேண்டும். எனவே இது ஓயும் கடலலைகளோடு, நிலத்திலிருந்து நீருக்குப் பின்னோக்கிச் செல்லும் கடலலைகளோடு ஒப்பிடப்படுகிறது. அம்போதரங்கத்தின் நான்கு பகுதிகள்: பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண்.

பேரெண்: இயற்சீராலான நான்கு அளவடிகள் பெற்றது. இரண்டாவது, நான்காவது அடிகளில் பொருள் முற்றுப்பெற வேண்டும்.

அளவெண்: இயற்சீராலான இரண்டு அல்லது நான்கு அடிகள் பெற்றது: பொருள் ஒவ்வொரு அடியிலும் முற்றுப் பெறவேண்டும்.

இடையெண்: நான்கு அல்லது எட்டுச் சிந்தடிகளைப் பெற்றது. இயற்சீரும் வெண்சீரும் கலந்து வருவது. ஒவ்வொரு அடியிலும் பொருள் முடிய வேண்டும்.

சிற்றெண்: குறளடிகளைப் பெற்றது. இயற்சீரில் எதுவாகவும் இருக்கலாம். இடையெண் ஐந்து சீர்களைக் கொண்டதானால், சிற்றெண் எட்டுச் சீர்களைப் பெறவேண்டும். இடையெண் எட்டுச்சீர்களைக் கொண்டதானால் சிற்றெண் பதினாறு சீர்களைக் கொண்டதாக வேண்டும். அதனைப் போலவே ஒவ்வொன்றிலும் பொருள் முடியவேண்டும்.

ஒத்தாழிசைக் கலிப்பாவின் மூன்று வகைகள்: நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணவொத்தாழிசைக் கலிப்பா.

கொச்சகக் கலிப்பாவின் ஐந்து வகைகள்: தரவு கொச்சகக் கலிப்பா, தரவிசைக் கொச்சகக் கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

துணையுறுப்புகளான தனிச்சொல்லும் சுரிதகமும் முதல் துணையுறுப்புகளில் ஒன்றன்பின் வந்து செய்யுள் பத்தியை நிறைவு செய்கிறது. தனிச்சொல் ஒரு சீராலானது; சுரிதகம் என்பது ஒரு நேரிசை ஆசிரியப்பா ஆகும்.

விருத்தம் எனும் கவிதை பாவகைகளைப்போல் எவ்விதமான ஒருகுறிப்பிட்ட சந்தத்தோடு (particular mode of rhythms of modulation) மட்டும் இணைக்கப்பட்டதன்று. அது பலவகைப்படும்; ஆனால், எல்லாவகை விருத்தங்களிலும் ஒவ்வொரு செய்யுள்பத்தியும் நான்கு அடிகளை மட்டும் கொண்டதாகவே அமையும். அது துறையென்றும் விருத்தமென்றும் இருவகைப்பட்டாலும் இரண்டிற்கும் பெயரளவில்தான் வேறுபாடே தவிர நடைமுறையிலன்று என்று எல்லிஸ் கருத்தறிவிப்பார். துறையானது வெண்துறையென்றும் வஞ்சித்துறையென்றும் பல பெயர்களைப் பெறலாமாயினும் இரண்டு வகைத்துறைகளே பரவலாகப் பயன்படுத்தப்பெறுபவை.

ஐந்து சீர்களாலான நான்கு நெடிலடிகளைக் கொண்ட செய்யுற் பத்திகள் யாவும் கலித்துறை என்று அழைக்கப்பெறும். காப்பியக் கலித்துறையும் வெளிவிருத்தமும் ஒன்றே.

விருத்தத்தில் நான்கு அடிகளும் ஒரெதுகை பெறவேண்டும்; எல்லாச்சீர்களும் தளைகளும் பாக்களும் பயன்படுத்தப்பெறலாம். ஆனால் முதலடியில் எவ்வகையானசீர் எவ்வளவில் கையாளப்பட்டதோ, அவ்வகைச்சீரே அந்த அளவிலேயே ஏனைய மூன்று அடிகளிலும் கையாளப்பெறவேண்டும். முதலடியில் மாச்சீர் எங்கு இடம்பெற்றதோ அங்கேயே தொடர்ந்து மாச்சீர் இடம் பெறவேண்டும். காய்ச்சீரானாலும் பொதுச்சீரானாலும் காசில் முடியும் உரிச் சீரானாலும், விளமானாலும் இதேமுறை பின் பற்றப்படல் வேண்டும்.

விருத்தத்தின் வகைகளாவன:

குறளடி அல்லது வஞ்சித்துறை விருத்தம்	**இருசீர்**
சிந்தடி அல்லது வஞ்சி விருத்தம்	**முச்சீர்**
அளவடி அல்லது கலி விருத்தம்	**நாற்சீர்**
நெடிலடி அல்லது வெளிவிருத்தம்	**ஐஞ்சீர்**
கழிநெடிலடி அல்லது ஆசிரிய விருத்தம்	**அறுசீர், எழுசீர், எண்சீர்**

இத்தகைய விருத்தமல்லாமல் இன்னொரு வகை விருத்தமும் உண்டு. அது அசை, சீர், தளை ஆகியவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் கவிதையின் பலஇடங்களில் நீண்ட குறுகிய அசைகளை (long and short syllables) அடிப்படையாகக் கொள்கிறது. இது சமஸ்கிருத விருத்தத்தின் தழுவல் எனக் கருதும் எல்லிஸ் சமஸ்கிருத விருத்தத்தில் ஒருவகை மோனையைச் சேர்ப்பதன் மூலம் தமிழ் யாப்பிலக்கணக்காரர்கள் இம்மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்று கூறுவார்.

இத்தகைய விருத்தம் சந்தவிருத்தமென்றும் ஆசிரியவிருத்தமென்றும் இருவகைப்படும். சந்த விருத்தத்தில் ஓரடியில் மோனை இரண்டுமுறை மட்டுமே வருகிறது. ஆசிரிய விருத்தத்தில் ஒவ்வொரு சீரிலும் வருகிறது.

தமிழ் விருத்தத்தையும் சமஸ்கிருத விருத்தத்தையும் ஒப்பிட்டு எல்லிஸ் கூறும் கருத்துகள் நம் சிந்தனைக்கு உரியவை. தமிழ் விருத்தம் வடமொழி விருத்தத்தின் தழுவலாக இருக்கலாம் என்று கருத்தறிவிக்கும் எல்லிஸ் உண்மை இதற்கு மாறாகவும் இருக்கலாம் என்பதை ஏற்றுக் கொள்கிறார். தமிழ்விருத்தம் சமஸ்கிருத விருத்தத்திலிருந்து அமைப்பில் வேறுபடுகிறது. நீண்ட, குறுகிய அசைகள் கலந்த நான்கு சீர்களையே வடமொழி விருத்தம் அனுமதிக்கும். தமிழ்விருத்தத்தின் வகைகள் மிகப்பல. அது இருபத்தெட்டு சீர்களை அனுமதிக்கிறது. கம்பரின் இராமாயணம் 12,600 செய்யுட்களைக் கொண்டது. கம்பர் 87 வகையான சந்தங்களைப் பயன்படுத்தியுள்ளார். வீராமாமுனிவர் 3,600 செய்யுட்களைக் கொண்ட தேம்பாவணியில் 90 வகையான சந்தங்களைக் கையாண்டிருப்பதாகக் கூறுகிறார். எல்லிஸ் தமிழில் நூற்றுக்கணக்கான சந்தங்களை உருவாக்க வழியிருப்பதையும் சிலசந்தங்கள் குறையுடையனவாய்க் கவிதையெனக் கருத இயலாதவையாய்ப் போகலாம் என்பதையும், பலசந்தங்கள் காதிற்குப் பேரின்பம் அளிக்கவல்லவை என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

அந்தாதித் தொடையை அறிமுகப்படுத்தும்போது அவர் கூறும் கருத்துகள் நுட்பமானவை.

> கவிதைகள் எதுகையில்லாமல் வரக்கூடிய ஒரே இடம் அவை அந்தாதித்தொடையால் இணைக்கப்பட்டிருக்கும் போதுதான். இச்சூழலில், ஒரு கவிதையின் கடைசி எழுத்து அல்லது அசை அல்லது அடி அதற்கு அடுத்த கவிதையின் தொடக்கத்தில் அதே பொருளிலோ, வேறு பொருளிலோ மீண்டும் பயன்படுத்தப் பெறும். முதற்கவிதையின் முதற்சொல் இறுதிக்கவிதையின் இறுதியடியை முடிவு செய்யும். பலநீண்ட இலக்கியங்களில் அந்தாதித் தொடை தொடர்ந்து கையாளப்பெறக் காணலாம். இவற்றில் ஒவ்வொரு பாடலின் முதல்வரியின் முதல் சொல் அல்லது சொற்கள் பாடலின் இறுதி வரியின் சொல்

அல்லது சொற்களோடு ஒத்திருக்கும். ஆயிரம் நாலடிப் பாடல்களைக் கொண்ட திருவாய்மொழி அந்தாதித்தொடையைப் பின்பற்றுவதில் சிறப்பாகச் செயல்படுகிறது.

இம்முன்னுரையுடன் திருவாய்மொழியின் முதலிரண்டு பாடல்களை மொழிபெயர்த்துத் தருவார்.

எதுகையும் மோனையும் பற்றி அவர் குறிப்பிடும் கருத்து அவருடைய கவிதையியல் பற்றிய அறிவைப் புலப்படுத்தும்.

Monai or alliteration, as well as rhyme, is in Tamil verse by no means a mere ornament, but is of considerable utility, as affording additional means of correcting the errors of ignorance of carelessness The rules of Tamil prosody seem indeed to have been inserted as much to supply this facility of correction as to give grace or melody to language, and as all works in this language are in verse, whatever tends to preserve the purity of the text in them must be of special importance.

(எதுகையைப் போன்றே மோனையும் தமிழ்க்கவிதையில் வெற்று அலங்காரப்பொருள் என்று கருதமுடியாத கூறாகும்; அதன்பயன் குறிப்பிடத்தக்கது. இது அறியாமையாலோ, கவனமின்மையாலோ விளையும் தவறுகளைத் திருத்திக் கொள்ளத் துணை செய்யும் கூடுதலான வழிமுறையாகும். அழகைக் கூட்டுதற்கோ, இசையின்பத்தை மிகுவிப்பதற்கோ மட்டுமல்லாமல் பிழையைத் திருத்திக்கொள்வதற்கும் பயன்படுமாறு தமிழ் யாப்பிலக்கண விதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மொழியில் எல்லா நூல்களுமே கவிதை நடையில் ஆக்கப்பட்டிருப்பதால் பனுவலின் தூய்மையைக் காக்கத் துணை செய்யும் எக்கூறும் இன்றியமையாததாகும்.)

தலைசிறந்த ஆங்கிலக் கவிஞரும் கவிதைக் கோட்பாட்டு விற்பன்னருமாகிய கோலரிட்ஜ் (Coleridge) கவிதையென்னும்

உயிர்ப்பொருளுக்கு எதுகை, மோனை போன்ற யாப்புக் கூறுகளெல்லாம் இன்றியமையாத உறுப்புகளாக (organic parts) இருக்க வேண்டுமென்றும் கவிதையை அணிசெய்யச் செயற்கையாய்ச் சேர்க்கப்படும் பொருளாக இருக்கக்கூடாதென்றும் (Metre is not something superadded to poetry for ornamental purposes) அறிவித்துள்ளது நாம் இங்கு நினைவுகூர வேண்டிய ஒன்றாகும்.

அய்யன்வாளி அறுத்திட ஆடவர்

கையில்வாய் விழக்கண்டுதன் காதலி

செய்ய தாமரைக் கண்களில் சேர்த்திய

மையிதாமெனக் கண்டு உயிர் மாய்ந்தனள்

என்ற இராமாயணப்பாடல் பற்றிய எல்லிசின் குறிப்பு அவர் தமிழ்இலக்கியத்திலும் தமிழ்ப்பண்பாட்டிலும் காட்டிய ஒத்த அளவு ஈடுபாட்டைக் காட்டும்.

Allusion is here made to the custom prevalent among the women of India of artificially blackening their eyes; an eye thus blackened if wiped by the hand when moist with tears must have left a mark, by which the wife remembering the circumstance knew it to be her husband's – the scholiast says he supposes the hand must have been let fail by a kite or some other bird of prey.

இந்தியப் பெண்களிடையே பரவலாகக் காணப்படும் பழக்கமாகிய கண்களைச் செயற்கையாகக் கருமையாக்குவது இப்பாடலில் சுட்டப்படுகிறது; இவ்வாறு கருமையாக்கப்பட்ட கண் கண்ணீரால் நனைந்தபோது கையால் துடைக்கப்பட்டால் அவ்விடத்தில் கறை படியும். இச்சூழலை நினைவுகூரும் மனைவி கீழே விழுந்த கை தன்கணவனின் கையென்று அடையாளம் கண்டு கதறுகிறாள். இக்கை கழுகினாலோ வேறு வேட்டைப் பறவையினாலோ மேலிருந்து போடப்பட்டிருக்கும் என்று உரையாசிரியர் தம் ஊகத்தைத் தெரிவிப்பார்.

"வெங்கதிரை யுண்ட மதுபங்கயம்" என்று தொடங்கும் பாரதப் பாடலின் மொழிபெயர்ப்பைத் தந்துவிட்டு எல்லிஸ்,

The countenance of a woman of a fair complexion is in this verse compared to a white lotus, and the color is philosophically as well as poetically attributed to the operation of solar beams; the optical notion does not however strictly agree with that generally received among us, for it adds a white ray to the tints. This is not the only instance, as will be seen in many of the examples I have quoted in which the ideas of the ancient Tamil poets, and the discoveries of philosophers comparatively modern, agree.

என்றெழுதுவது நோக்கற்பாலது.

வெண்ணிற மங்கையின் முகம் இக்கவிதையில் வெள்ளைத் தாமரையோடு ஒப்பிடப்படுகிறது. இந்நிறம் ஞாயிற்றின் கதிர்களால் விளைவதாகக் கவிதை கூறுவது அறிவியலுக்கும் ஏற்புடையதாகும். இவ்வாறு பழந்தமிழ்க் கவிஞர்கள் கூறும் கருத்துகள் இன்றைய அறிவியலாரின் கண்டுபிடிப்புகளோடு ஒத்துப்போவதற்கு இது ஒன்று மட்டுமல்லாமல் பல சான்றுகளைக் காணலாம்.

கட்டளைக் கலிப்பாவை வரையறை செய்யும் நூற்பாவின் ஆங்கில மொழிபெயர்ப்பு நம்மவர் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

இட்டசீர் வகையானொரு மாவினகழ்

இயைமுக கூவிளமோரடி பாதியாய்

நெட்டடிக் கெழுத்தெண்ணினதன் மையான்

நிரைபன்னி ரெழுத் தாய்ப்பதினொன்று நேர்

நட்டிரப்படி னஃதோரடியாகவிந்

நடையநான்கடி யொப்பநடந்தபாக

கட்டளைக் கலிப்பா வெனவின்று நற்

கலை வல்லோ ருணர்ந்தோதின ரென்பவே.

After a ma according to the rule given for the sir

Join then cuvilam to make half a verse

If the letter in half the verse be counted

There will be twelve syllables if it begin with

Nirai, eleven if it begin with Ner

Stopping here and reckoning these doubled as one verse

The stanza which contains four verses of this description

Know to be the Cattalai Calippa – a name given to it by the learned.

சிற்றின்பம் வெஃகியறனல்ல செய்யாரே

மற்றின்பம் வேண்டு பவர்

எனும் குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, ஒருவிளக்கத்தையும் தரும் எல்லிஸ் அந்த விளக்கம் ஏன் தேவைப்படுகிறதென்று காரணம் கூறுவார்.

In translating Tiruvalluvan, I am never certain that I render him right, a literal translation as that of this verse omitting the words underlined, would be altogether unintelligible, and a gloss therefore must be added. Whether in the present case I have given one which reaches the author's meaning I much doubt.

(திருவள்ளுவனை மொழிபெயர்க்கும்போது அவரைச் சரியான முறையில் தருகிறேன் என்று எப்பொழுதும் என்னால் உறுதியாக

எண்ண முடியவில்லை. இக்குறளை மொழிபெயர்த்திருப்பதைப் போல் எதனையும் சேர்க்காமல் சொல்லுக்குச் சொல் மொழி பெயர்த்தால் அதனால் மூலத்தை முற்றுமாகப் புரிந்துகொள்ள முடியாது. எனவே விளக்கக் குறிப்பொன்று கட்டாயம் சேர்க்கப் படவேண்டும். இம்மொழி பெயர்ப்போடு நான் கொடுத்திருக்கின்ற விளக்கக்குறிப்பு ஆசிரியர் சொல்லும் கருத்திற்கு நெருக்கமாக இருக்கிறதா என்பதில் எனக்கு மிகுந்த ஐயப்பாடு உண்டு.)

இருமொழிகளிலும் அவருக்கிருந்த ஆழ்ந்த பயிற்சியும் மொழிபெயர்ப்புக்கலை பற்றிய அவரது நுண்ணிய உணர்வும் மட்டுமல்லாமல் அவரது தன்னடக்கமும் இத்தகைய குறிப்புகளால் வெளிப்படக் காணலாம்.

வீரமாமுனிவரின் **"கரோருகம் போல்"** என்று தொடங்கும் பாடலை மொழிபெயர்க்குமுன் "இது கன்னிமேரிக்கு வீரமாமுனிவரின் விண்ணப்பம்; இதன் உருமாற்றம் எத்தகையதாயினும் இதில் வடமொழிச் சொற்கள் நிறைந்திருக்கக் காணலாம். இதனை மூலத்தில் உள்ளவாறு சொல்லுக்குச் சொல்லான மொழிபெயர்ப்பில் தருவது முடியாத செயலாகும். எனவே, அதன் (Paraphrase) பொழிப்புரையை ஆங்கிலத்தில் தருகிறேன்" என்று கூறுவார்.

"விரைவாய்மலர்" எனத் தொடங்கும் தமிழ்ப் பாடல் இளவேனில் கால நிகழ்வுகளை அழகாக வருணிக்கிறது. பூக்கள் புன்னகை செய்வன போல் மலர, வண்டுகள் யாழ் போல் இன்னிசை எழுப்ப, ஓடைகளின் கரைகளில் நிறைந்துள்ள தாழை முகைகள் மணம் பரப்ப, தென்றல் சோலைகளில் உலவி உலகை இன்பத்தில் ஆழ்த்துகிறது. இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுத்துவிட்டு எல்லிஸ்,

இவ்விளவேனில் வருணனை பேரழகுடையது. ஆனால் இந்தியாவின் எப்பகுதிக்கு இது பொருந்துவது என்று எனக்குத் தெரியவில்லை. தெற்கிலுள்ள தீபகற்பத்தின் எப்பகுதியையும் என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. இதற்கு விதிவிலக்காகக் குமரியின் அருகிலுள்ள மாவட்டங்களை மட்டும்

கருதமுடியும். ஏப்ரல் மாதத்தின் நடுப்பகுதியில் அங்கு வாடை வீசத் தொடங்குகிறது. ஆயினும் இங்கு அடையாளங் காணப்பட்டுள்ள சூழல் அதனைத் தொடர்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை.

என்று எழுதுகிறார். தமிழிலக்கியங்களில் அவருக்கிருந்த ஆர்வத்தையும் தமிழ்ப்பாடல் ஒவ்வொன்றையும் எந்த அளவுக்கு அவர் மதித்தார் என்பதையும் இச்சிறுகுறிப்பும் புலப்படுத்தும்.

சிவவாக்கியரின் சிவவாக்கியத்தைப் பாராட்டி எல்லிஸ் எழுதியுள்ள கருத்து நம்மவர் அறியவேண்டிய ஒன்றாகும்.

This book the title of which signifies literally a discourse on God contains sublime notions of the Deity and inculcates the greatest reverence towards him, discards the figurative mythology, the subtle philosophy, and the never-ending ceremonies of the Brahmans; it rebukes the vanity of their pretensions to superior sanctity, derides the notion that the almighty could have made an inherent difference between his creatures, denies the metamorphosis and exposes the futility of believing that merit is acquired by a repetition of words or a routine of frivolous and inconsequential actions. The name of the author is said to have been Sivavakkiyar but I am rather inclined to think it is an epithet applied to him from the title of the work; Sivavakkiyam means a discourse concerning the deity; The style of this work being entirely free from mysterious or affected beauty, is by far more plain and intelligible than that of anyother book I ever read in Tamil on religious subjects; the language is an remarkable for its purity as for its intelligibility, being but little intermixed with Sanskrit and for these reasons the book is perhaps the best that can be put into the hands of a person commencing the study of the high Tamil.

(இந்த நூல் "இறைவனைப்பற்றிய ஒரு சொல்லாடல்" என்ற

தலைப்பினைக் கொண்டது. இறைவனைப்பற்றிய உயர்ந்த எண்ணங்களை உட்கொண்டிருப்பதோடு இறைவனிடத்து வைக்க வேண்டிய பெருமதிப்பை மனத்தில் ஆழப்பதியச் செய்கிறது. பிராமணர்களின் முடிவில்லாத சடங்குகள், சாதுர்யமான தத்துவம், அலங்கரிக்கும் தொன்மம் ஆகியவற்றை இது புறக்கணிக்கிறது. அவர்கள் உயர்ந்த புனிதத்தன்மைக்கு உறவு கொண்டாடி வெளிப்படுத்தும் போலிப்பகட்டைச் சாடுகிறது. எல்லாம்வல்ல இறைவன் அவனுடைய படைப்புகளில் பிறவியிலேயே ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கியிருப்பான் என்ற அவர்களுடைய கருத்தை எள்ளி நகையாடுகிறது; உயிர்களின் உருமாற்றக் கொள்கையை மறுக்கிறது; சில சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலமாகவோ, அற்பமான, பொருளற்ற சடங்குகள் மூலமாகவோ புண்ணியம் அடையலாம் என்பது வீணான நம்பிக்கையென்று அம்பலப்படுத்துகிறது.

இந்நூலாசிரியரின் பெயர் சிவவாக்கியர் என்று குறிப்பிடப்பட்டாலும் அது நூலின் தலைப்பிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட தென்றே நான் கருதுகிறேன். இவ்விலக்கியத்தின் நடையில் எந்த விதமான செயற்கை அழகையோ புதிர்த்தன்மையையோ காணவியலாது. நான் தமிழில் பயின்ற சமயம் பற்றிய நூல்களில் இதனைவிடத் தெளிவான, வெளிப்படையாகப் பொருள் தரக்கூடிய வேறு நூலெதனையும் பார்த்ததில்லை. அதன் மொழிநடை தூய்மையானதும் பொருள் விளங்கக் கூடியதுமாகும்; வடமொழிக் கலப்பில்லாதது. இக்காரணங்களுக்காக, நல்ல தமிழைக் கற்கத் தொடங்கும் யாருடைய கரங்களிலும் அளிக்கப்பெறவேண்டிய தலைசிறந்த நூல் இது.)

சிவவாக்கியத்திலிருந்து அவர் மேற்கோள்களாகத் தருகின்ற பாடல்கள் இன்று அறிஞர்களால் போற்றப்படுபவை. அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் அப்பழுக்கற்றவை.

நீரையள்ளி நீரில்விட்டு நீநினைந்த காரியம்

ஆரையுன்னி நீரெலாம் அவத்திலே இறைக்கிறாய்

வேரையுன்னி வித்தையுன்னி வித்திலே முளைத்தெழுந்த

சீரையுன்ன வல்லிராய் சிவபதங்கள் சேருமே

While taking up the water and on quitting the water in performing the Sandhya and other rites

what is the object on which you think?

On whomsoever you think you have thrown all the water vainly

Think on the root, think on the seed, and on the benefit coming from that seed;

When you are thus abled to think you will approach the feet of God.

சாதியாவதே தடாசலந்திரண்ட நீரல்லோ

பூதமைந்தும் ஒன்றல்லோ புலன்கள் ஐந்தும் ஒன்றல்லோ

காதுவாளி காறை கம்பிசூடகம் பொன்னொன்றல்லோ

சாதி பேதம் ஓதுகின்ற தன்மையென்ன தன்மையே.

What, O wretch, is caste? Is not water an accumulation of fluid particles?

Are not the five elements and the five sense one?

Are not the several ornaments for the neck, the breasts and the feet equally gold?

What then is the peculiar quality supposed to result from a difference in caste?

கறந்த பால் முலைப்புகா கடைந்த வெண்ணெய் மோர்புகா

உடைந்த சங்கின் ஓசையும் உயிர்களும் உடல்புகா

வடிந்த வோரடையினி உதிர்ந்தபூ மரம்புகா

இறந்துபோன மானிடா; இனி பிறப்பதில்லையே.

As milk once drawn cannot again enter the udder, nor milk churned by recombined with milk;

As sound cannot be produced form a Brocken conch; nor the life be restored to its body;

As a fallen leaf cannot be reunited to the flowering tree;

So a man once dead is subject to no future birth.

சிலப்பதிகாரத்து "ஆய்ச்சியர் குரவை"யிலிருந்து இன்று நாம் போற்றிக் கொண்டாடும் மூன்று இசைப்பாடல்களைத் தெரிந்தெடுத்து ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துத் தருகிறார்.

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்

இன்று நம் மானுள் வருமேலவின் வாயிற்

கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ

பாம்பு கயிறாக் கடல் கடைந்த மாயவன்

ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்

ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ

கொல்லையஞ் சாரற்குருந்தொசித்த மாயவன்

எல்லைநம் மானுள் வருமேல் அவன் வாயில்

முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ

If mayavan who threw down the fruit by a stone from his sling

should come now according to our wish

shall we hear, my companion, the sweet pipe like

the fruit of the conrei which is in his mouth?

If Mayavan who churned the sea by the serpent rope

Should come now according to our wish

Shall we hear, my companion, the sweet pipe formed of a reed which is in his mouth?

If Mayavan who in ancient time broke the bow formed of well united curudu wood

Should come in the night according to our wish

Shall we hear, my companion, the sweet pipe of the pasturage?

ஆசிரியத் தாழிசைக்குச் சான்றாக வரும் இப்பாடல்களுக்கு உட்பொருள் இருக்கலாமென்றும் அதனைத்தேடும் முயற்சி பலனளிக்கும் என்பது ஐயத்திற்குரியதேயென்றும் எல்லிஸ் குறிப்பிடுவார்.

சீவக சிந்தாமணியின் தொன்மையைச் சுட்டிக்காட்டி அதிலுள்ள பாடலொன்றின் கருத்து எவ்வாறு உலகமக்களெல்லாம் கொண்டுள்ள பொது நம்பிக்கையாயிருப்பதை எடுத்துக்காட்டுவார்.

அல்லித் தாளற்றபோதும் அறாத நூலதனைப்போலத்
தொல்லைத் தம்முடம்பு நீங்கத்தீவினை துடர்ந்து நீங்கா
புல்லிக் கொண்டுயிரைச் சூழ்ந்து புக்குழிப்புக்கும் பின்னின்று
எல்லையில் துன்ப வெந்தீய சுட்டெரித்திடுங்களென்றே.

As when the leaf of a water lily is broken the fibers within it are yet unbroken

Thus though thy old body be destroyed thy sins will follow thee

And surrounding thy indestructible soul will plunge her

Into the lowest and most horrid hell

And burn her in flames of unquenchable fire, with torment unutterable.

ஒருவன் செய்த தீவினையானது அவன் உடல் அழிந்த பின்னும் அவனது ஆன்மைவைப் பற்றிக் கொண்டு அது நரகத்தில் தீயினால் துன்புற ஏதுவாகும் என்ற கருத்தைச் சொல்லும் இப்பாடல் தென்னிந்தியாவில் வைதிக சமயங்களின் தாக்கத்திற்கும், கிருத்துவ சமயம் அறியப்படாததற்கும் முன்பே எழுதப்பட்டதென்பார்.

திருவாய்மொழிப் பாடலொன்றினுக்கு அவர்தரும் மொழிபெயர்ப்பு நினைவில் நிறுத்திப் போற்றப்பட வேண்டியது.

நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச்

சீரார் சுடர்களிரண்டாய் சிவனாய் அயனாய்க்

கூராராழி வெண்சங்கேந்தி கொடியேன் பால்

வாராயொருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே.

Thou art the water, thou art the earth, thou art fire

Thou art the extended heaven

Thou art the two regulated lights, thou art Sivan, Thou art Ayan Brahma

O thou who holdest a white chank from the extensive ocean, to me the sinner

Wilt thou not one day come darting joy throughout earth and heaven?

கட்டளைக் கலித்துறைச் செய்யுளின் இலக்கணத்தைக் கூறிவிட்டு அதற்குச் சான்றுப்பாடலாக அவரே எழுதிய ஒரு பாடலைத் தருவார். அப்பாடல் சேக்ஸ்பியரின் The merchant of Venice, Measure for Measure எனும் இரண்டு நாடகங்களில் இரு வேறிடங்களில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களின் சுருக்கமாகும்.

The quality of mercy is not strained

It droppeth like the gentle dew of heaven

Upon the place beneath.

No ceremony that to the great ones belong

Not the King's Crown, nor the deputed sword

The marshal's truncheon nor the judge's robe
Become them with one half so good a grace
As mercy does.

அருளேயளநீராயில்லா வெல்லார்க்குமது நிகராம்
இருத்தி புவியளி வானீர் விழும் போலிருக்கு மருள்
செருக்கள வீரற்கு வேலுமரசற்குச் சேகரமும்
அருமானம் பேர் புகழ் மெய்யிழையல்ல வருளிழையே.

அவரெழுதிய இப்பாடலை மீண்டும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுக்கிறார்.

The quality of mercy is not strained, it is alike to all

Mercy descendeth as the dew of heaven falleth to refresh the joyous earth

Not the sword of the hero, renowned in war, not the crown of the monarch

Not the highest honor or the greatest renown are true ornaments –

the truest ornament is mercy.

மூர் என்பார் எழுதிய கவிதையொன்றை ஆங்கிலத்தில் கொடுத்து அதன் தமிழ் மொழிபெயர்ப்பைக் கலிவெண்பாவில் தருகிறார்.

This world is all a fleeting show
For man's illusion given;
The smiles of joy, the tears of woe,
Deceitful shine, deceitful flow,

There is nothing true but heaven!

And false the light on glory's plume,
And fading hues of even;
And love and hope, and beauty's bloom,
Are blessings gathered from the tomb–
There is nothing bright but heaven!

Poor wanderes of a stormy day,
From wave to wave we are driven,
And fancy's flash and reason's say
But serve to light the troubled day;
There is nothing calm but heaven!

இவ்வுல கெல்லாமே யெல்லிடுங் கானற்போன்று
எவ்வுயிர்க்கு மேவு தருமயலே – யெவ்வத்தான்
கண்ணிருங் காட்டுறுமின் பத்தாற் சிரிப்புமே
கண்ணுறின் யாண்டுங் கடுமயலே – யுண்டு
மயலி லியலொன்றே மன்னுயிரா ராய
புயலி லயற்கு வழியே – குயவாழ்
நிகமெஞ்சு ஞாயிறு நீட்டுகதிர் நேராய்ப்
புகழ்மகிமை பொன்னிற நில்லா – வகன்றாகி
மீண்டுலகின் செல்வமெல்லா மேவுமின் பன்புவன்பு

மாண்டு முழுமையும் வாடுமிவை – பூண்ட

புறக்காட்டுக் கண்ணரும்பும் பூவிதழ்கட் போலத்

திறமிருளுண் டீண்டு திறமா – நிறமன்று

இருளி லியலொன்றே யென்னுயிரா ராய

தெருளயற்றேடும் வழியே – மருள

வலைக்காற் றலைத்த வுல கின்றோணி யுள்ளோர்

அலையாலே டல்லலைமீதாடி – மலைவாய

மதியென்னு மின்னலொளி மால்வீறித் தன்னாற்

கொதிகடற் கல்லோலங் காண்பார் – அதிரா

வமரி லியலொன்றே யென்னுயிராராய்

அமைந்த வயற்சேர் வழி.

தமிழ்ச்சீர் வகைகளை ஐரோப்பிய யாப்பிலக்கணம் காட்டும் சீர்வகை (feet)களோடு எல்லிஸ் பொருத்திக் காட்டுவது அவரது யாப்பிலக்கணப் புலமையைத் தெளிவாக்கும்.

நேர்நேர்	தேமா	Spondee / - - /
நிரைநேர்	புளிமா	Anapaest / ◡◡ - /
நிரைநிரை	கருவிளம்	Double Pyrrhic /◡◡◡◡ /
நேர்நிரை	கூவிளம்	Dactyl / - ◡◡ /
நேர்நேர்நேர்	தேமாங்காய்	Melossus / - - - /
நிரைநேர்நேர்	புளிமாங்காய்	Ionic Minor or Pyrrhic spondee / ◡◡- - /
நிரைநிரைநேர்	கருவிளங்காய்	Pyrrhic anapaest / ◡◡ ◡◡- /
நேர்நிரைநேர்	கூவிளங்காய்	Coriambic / -◡◡- /
நிரைநிரைநிரை	கருவிளங்கனி	Tripyrrhic / ◡◡ ◡◡ ◡◡ /

நேர்நிரைநிரை	கூவிளங்கனி	Dactylo Pynhic / -∪∪ ∪∪ /
நேர்நேர்நிரை	தேமாங்கனி	Ionic Major or Spondee –o-Pyrrhic /--∪
நிரைநேர்நிரை	புளிமாங்கனி	Anapaest-o-Pyrrhic /∪∪-∪∪/
நேர்நேர்நேர்நிரை	தேமாந்தண்ணிழல	Spondee-o-dactyl / - - ∪∪/
நிரைநேர்நேர்நிரை	புளிமாந்தண்ணிழல	Anapaest-o-dactyl /∪∪-∪∪/
நேர்நிரைநேர்நிரை	கூவிளந்தண்ணிழல	Bidactyl / -∪∪ - ∪∪ /
நேர்நேர்நேர்நேர்	தேமாந்தண்பூ	Bispondee / - - - -/
நிரைநேர்நேர்நேர்	புளிமாந்தண்பூ	Anapaest-o- Spondee /∪∪---/
நிரைநிரைநேர்நேர்	கருவிளந்தண்பூ	Bipyrrhic spondee /∪∪∪∪--/
நேர்நிரைநேர்நேர்	கூவிளந்தண்பூ	Dactyl Spondee / -∪∪ -- /
நேர்நேர்நிரைநேர்	தேமாநறும்பூ	Spondee-o- anapaest /--∪∪-/
நிரைநேர்நிரைநேர்	புளிமாநறும்பூ	Bianapaest /∪∪-∪∪-/
நிரைநிரைநிரைநேர்	கருவிளநறும்பூ	Bipyrrhic anapaest /∪∪ ∪∪ ∪∪ -/
நேர்நிரைநிரைநேர்	கூவிளநறும்பூ	Dactylo anapaest /-∪∪ ∪∪ -/
நேர்நேர்நிரைநிரை	தேமாநறுநிழல	Spondee-o- bipyrrhic /-- ∪∪ ∪∪/
நிரைநேர்நிரைநிரை	புளிமாநறுநிழல	Anapaest-o- bipyrrhic /∪∪ - ∪∪ ∪∪/
நிரைநிரைநிரைநிரை	கருவிளநறுநிழல	Tetrapyrrhic /∪∪ ∪∪ ∪∪ ∪∪/
நேர்நிரைநிரைநிரை	கூவிளநறுநிழல	Dactyl -o- bipyrrhic /- ∪∪ ∪∪ ∪∪/

நாடகத்தின் தொடக்க நிகழ்வான
தோடி அல்லது சிந்து – நாட்டை;
மங்கலசிந்து அல்லது எபிதலேமியம்
(கிரேக்கத் திருமணப் பாடல் –
மங்களு; தேவாரம் அல்லது
இறைவனைப் புகழும் பாடல்கள்...

தமிழ்ப் பாவகைகளைக் கர்நாடக இசையில் குறிப்பிடப்பெறும் இராகங்களோடு அவர் பொருத்திக் காட்டுவது இப்பாவகைகள் இசை நுணுக்கங்களை உள்ளடக்கியவை என்பதைத் தெளிவு படுத்தும்: வெண்பா – சங்கராபரணம் அகவல் – தோடி; கலிப்பா – பந்துவராளி; கலித்துறை – பைரவி; பாவினத் தாழிசை – தோடி; விருத்தம் – கல்யாணி, காம்போதி, சாவேரி, முற்றிய மாவடி; உலா அல்லது கலிவெண்பா – சௌராட்டிரம் நாடகத்தின் தொடக்க நிகழ்வான தோடி அல்லது சிந்து – நாட்டை; மங்கலசிந்து அல்லது எபிதலேமியம் (கிரேக்கத் திருமணப் பாடல் – மங்களுரு; தேவாரம் அல்லது இறைவனைப் புகழும் பாடல்கள் - பூபாளம் பரணி – காந்தர்வம் தில்லை தனிழ் – கேதார கவுளம் ஒவ்வொரு பாடல்வகையின் தொடக்கம் – நாட்டை.

வஞ்சிப்பாவின் விருத்தமும் அகவலும் ஒன்றென்பதால் அவையிரண்டிற்கும் தோடியும், வெண்பா, அகவல் ஆகியவற்றின் கூட்டான மருட்பாவைப் பொறுத்தமட்டில் முதல் பகுதிக்குச் சங்கராபரணமும் இரண்டாம் பகுதிக்குத் தோடியும் பொருந்தும் என்பார்.

இவ்வாறெல்லாம் தமிழ் யாப்பிலக்கணத்தைப் பலகோணங்களி லிருந்து பார்த்து அதனை உள்ளவாறு விளக்குவதோடு அமையாது அது ஏனைய மொழி யாப்பிலக்கணங்களுக்கில்லாத சிறப்புக் கூறுகளையெல்லாம் பெற்றிருப்பதை எல்லிசின் நூல் தெளிவுபடுத்தும். தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ச்சமுதாயம் ஆகியவற்றின்மேல் தீராக்காதல் கொண்டு, தன்னலம் கருதாது எப்பயனும் எதிர்பாராமல் அரும்பணி ஆற்றிச் சென்றிருக்கும் எல்லிஸ் பெருமகனார்க்குத் தமிழினம் பெரிதும் கடன் பட்டிருக்கிறது.

****

சங்கச் செய்திகள்...

02.10.2020 அன்று காலை 11 மணியளவில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பாக சிறப்புக் கருத்தரங்கம் இணையவழியில் நடைபெற்றது. மதுரை காந்தி மியூசியம், காந்திய சிந்தனை மற்றும் யோகா பேராசிரியர் முனைவர் சபுரா பீபி அவர்கள் கருத்துரை ஆற்றினார். கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் பா.நேருஜி ஆகியோர் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தனர்.

14.10.2020 அன்று காலை 11 மணியளவில் நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பில் தேசிய சாலைப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கம் இணையவழியில் நடைபெற்றது. மதுரை மாநகரக் காவல்துறை உதவி ஆணையர் முனைவர் கவிஞர் ஆ.மணிவண்ணன் அவர்கள் சாலைப் பாதுகாப்பு விதிகள், சாலை விதிகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியம், விதிமீறலுக்கான தண்டனைகள் குறித்து மாணவர்களிடையே உரையாற்றினார். கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் பா.நேருஜி ஆகியோர் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தனர்.

19.10.2020 அன்று முற்பகல் 10.30 மணியளவில் இருமொழிக் கொள்கை என்ற பொருண்மையில் இணையவழிக் கருத்தரங்கம் நடைபெற்றது. முதலாம் அமர்வில், ஆந்திரப்பிரதேசம், திராவிடப் பல்கலைக்கழகம், தமிழ்மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பொருநை க.மாரியப்பன் அவர்கள் 'தமிழகமும் இருமொழிக்

கொள்கையும்' என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். இரண்டாம் அமர்வில், தேனி வையைத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர் புலவர் ச.ந.இளங்குமரன் அவர்கள் 'இருமொழிக்கொள்கையின் அவசியம்' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். உதவிப் பேராசிரியர்கள் முனைவர் மு.செந்தில்குமார், முனைவர் பா.நேருஜி, முனைவர் சு. மலர்விழி ஆகியோர் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தனர்.

25.10.2020 அன்று காலை 9 மணியளவில் கலைமகள் விழா சங்க வளாகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் முதல்வர்(பொ.) முனைவர் கி.வேணுகா, துணைமுதல்வர் முனைவர் கோ. சுப்புலட்சுமி, உதவிப் பேராசிரியர்கள், நூலகர், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

27.10.2020 அன்று காலை 10 மணியளவில் பாண்டியன் நூலகத்திலுள்ள இருநூறு ஓலைச்சுவடிகள் மற்றும் இரண்டாயிரம் அரிய நூல்கள் மற்றும் ஆவணங்கள் தமிழக அரசின் பொது நூலக இயக்ககம் சார்பில், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்துடன் இணைந்து மின்னுருவாக்கப் பணி தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பணிகளை தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம.திருமலை அவர்கள் தொடங்கிவைத்தார். இந்நிகழ்ச்சிக்கு சங்கச் செயலர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். மதுரை மாவட்ட நூலக அதிகாரி திருமதி. யசோதா, கல்லூரி நூலகர் திருமதி தி.பிருந்தா, மணியம்மை மழலையர் பள்ளித் தாளாளர் திரு.பி.வரதராசன், மதுரை மாவட்ட இரண்டாம் நிலை நூலகர் திரு.முத்து, உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

****

திசம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

வள்ளல் பொன்.
பாண்டித்துரைத் தேவர்
(டிச.2)

கவியரசு
முடியரசன்
(டிச.3)

ந.பிச்சமூர்த்தி
(டிச.4)

கல்கி
(டிச.5)

கலாநிதி கைலாசபதி
(டிச.6)

நா.பார்த்தசாரதி
(டிச.13)

நாவலர் சோமசுந்தர
பாரதியார்
(டிச.14)


சு.செல்லப்பா
(டிச.18)

கி.ஆ.பெ
விசுவநாதனார்
(டிச.19)

பா.வே.மாணிக்க
நாயக்கர்
(டிச.25)

ராஜாஜி
(டிச.25)

மன்னர் பாசுகர
சேதுபதி
(டிச.27)

தமிழண்ணல்
(டிச.29)

தொ.மு.சி.ரகுநாதன்
1923-2001
(டிச.31)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

முனைவர் **ம.திருமலை**
முனைவர் **அ.தட்சிணாமூர்த்தி**
முனைவர் **இ.மறைமலை**
முனைவர் **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **செ.கந்தசாமி**
முனைவர் **மு.மணிவேல்**
முனைவர் **பெ.சுயம்பு**
முனைவர் **இ.கி.ராமசாமி**
முனைவர் **உ.கருப்பத்தேவன்**
முனைவர் **உ.ல.பாலசுப்பிரமணியன்**
முனைவர் **அ.நந்தினி**
முனைவர் **ச.கவிதா**

RNI Regd. No.5507/56

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1